தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கையை, உறுப்பினரின் கருத்தை, நிதிநிலை சீரான பின்பு மாண்புமிகு அம்மா அவர்கள் அரசு ஆய்வு செய்யும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வினா எண் *186*, திரு. பெ. பழனியப்பன், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

186—

பேருந்து வசதி

•2146—திரு. பெ. பழனியப்பன்:

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலூர் அம்மாபாளையம் மலைப் பகுதிக்குப் பள்ளி மாணவ, மாணவிகள் பள்ளிக்குச் சென்று வரும் வகையில் பேருந்து வசதி செய்து தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில் எப்பொழுது?

மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) சேலூரிலிருந்து தும்பல் பள்ளிக்கு மாணவ, மாணவிகள் சென்று வரும் வகையில் *4-6-2002* முதல் காலையிலும், மாலையிலும் பேருந்து இயக்கப்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

முற்பகல் *10-25*

திரு. பெ. பழனியப்பன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கேள்வி கேட்கிறபோது, அந்தப் பள்ளி மாணவர்கள் வசதிக்காக அங்கே பேருந்து இயக்கப்படவில்லை. கேள்வி கேட்டதற்குப் பின்னாலே நம்முடைய மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித்

தலைவி அம்மாவினுடைய அரசு நடவடிக்கை எடுத்து, இன்றைக்கு அந்தப் பள்ளி மாணவர்களின் பயனுக்காக சேலூர், அம்மாபாளையத்திலிருந்து தும்பலிலே படிக்கின்ற மாணவர்களுக்குப் பேருந்து வசதி ஏற்படுத்திக் கொடுத்திருக்கிறார்கள். அதற்காக அந்தப் பகுதிவாழ் மக்கள் சார்பாக என்னுடைய மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், I.T.D.P. --Integrated Tribal Development Programme--என்னும் மலைவாழ் மக்கள் மேம்பாட்டு ஒருங்கிணைப்புத் திட்டத்தின் மூலமாக, அங்கே புரட்சித் தலைவி அம்மாவினுடைய அரசு நடவடிக்கை எடுத்து, தற்போது திருவண்ணாமலை செல்வதற்கு வசதியாக ரூ.100 இலட்சம் மதிப்பீட்டிலே 10 கிலோ மீட்டர் சாலை அமைக்கப்பட்டு நல்ல முறையிலே இருந்து வருகிறது. ஆகவே, சேலம் பகுதி, வாழப்பாடி, ஆத்தூர், தும்பல் பகுதிகளிலே இருக்கின்ற பக்தகோடிகள் திருவண்ணாமலைக்குச் செல்ல வேண்டுமென்று சொன்னால், என்னுடைய மாவட்டத்தை ஒட்டியுள்ள அரூர் பகுதிக்கு வந்து செல்ல வேண்டும். ஆனால், சேலம் மாவட்ட மக்கள், புதிதாக சாலை அமைக்கப்பட்டுள்ள தும்பல் வழியிலே சென்றால் கிட்டத்தட்ட 30 கிலோ மீட்டர் குறையும். இதனால் வீண் செலவுகள் மீதம் ஆகும். போக்குவரத்து நெரிசல் குறையும்; எரிபொருள் செலவைச் சிக்கனப்படுத்த முடியும். எனவே, சேலம் மாவட்டத்து மக்களுக்காகவும், அங்கே என்னுடைய தொகுதியில் இருக்கின்ற சேலூர், அம்மாபாளையம், தும்பல் பகுதி மக்களின் சார்பாகவும், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் புதிய பேருந்து வழித்தடத்தை சேலூர், நதிப்பள்ளி, தாணிப்பாடி வழியாக விட முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விழைகிறேன்.

மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சேலம், போக்குவரத்துக் கழகத்தினுடைய நிதி நிலைக்கேற்ப மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு பரிவுடன் பரிசீலிக்கும் என்பதை அன்புடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு லா. சந்தானம்.

திரு. லா. சந்தானம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இப்பொழுது பேருந்துப் போக்குவரத்திலே சிறு மாறுதல்கள் செய்வதற்குக்கூட அரசினுடைய அனுமதி வேண்டுமென்று

2003 ஏப்ரல் 7]

மாவட்டங்களிலே இருக்கின்ற போக்குவரத்துக் கழகங்கள் சொல்கின்றன. உதாரணத்திற்குச் சொல்ல விரும்புகிறேன்; ஒரு கிராமத்திற்கு ஓடிக்கொண்டிருக்கின்ற பேருந்தை, அடுத்த கிராமம் வரை நம்முடைய விதிகளுக்கு உட்பட்டு நீட்டித்துத் தர வேண்டுமென்று சொன்னால், அதற்குக்கூட இங்கு வந்து அரசினுடைய அனுமதியைப் பெறவேண்டுமென்று சொல்கிறார்கள். இல்லையென்றால், சிறு மாற்றங்கள் செய்து அந்த ஊரிலிருந்து மாற்று வழியாகச் செல்வதற்குக்கூட அரசின் அனுமதி வேண்டுமென்று சொல்கிறார்கள். அப்படி ஒரு நிலை இருக்கிறதா? அல்லது அப்படி சிறு மாற்றங்களைச் செய்துகொள்வதற்கு மாவட்ட அளவிலே இருக்கின்ற போக்குவரத்துக் கழகங்களுக்கு உரிமம் வழங்கப்பட்டிருக்கிறதா என்பதைத் தங்கள் மூலம் அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே ஓடிக் கொண்டிருக்கிற வழித்தடங்களில் இயக்கப்படுகின்ற பேருந்துகளைச் சிறிதளவு நீட்டிப்பதோ அல்லது சென்று வருகின்ற தூரத்தைக் குறைப்பதோ அல்லது நேரம் மாற்றுவதோ போன்ற நடவடிக்கைகளை, இதற்கு முன்பு அந்தந்தப் போக்குவரத்துக் கழகங்களுடைய இயக்குநர்கள்தான் செய்து வந்தார்கள். இல்லையென்று சொல்லவில்லை. ஆனால், அதிலே சில பிரச்சினைகளும், நடைமுறையிலே சிக்கல்களும் ஏற்பட்டதன் காரணமாக, அதை முறைப்படுத்த வேண்டுமென்பதற்காக நிர்வாகச் சீரமைப்பு நடவடிக்கையாக--இப்பொழுது அந்த மாற்றங்களைச் செய்யக்கூடாது என்று சொல்லவில்லை--அந்த மாற்றங்கள் முறையாக இருக்க வேண்டுமென்ற காரணத்திற்காக, இப்பொழுது போக்குவரத்துத் துறையினுடைய அரசுச் செயலாளருடைய அனுமதியைப் பெற்று, மாற்ற வேண்டுமென்று சொல்லி இருக்கிறோம். ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வதுபோல, அந்தந்தப் பகுதியின் தேவைக்கேற்ப ஏதாவது மாறுபாடு செய்ய வேண்டுமென்று சொன்னால், அதிலே போக்குவரத்துத் துறையின் செயலாளருடைய ஒப்புதலைப் பெற்று, மாற்றுவதிலே எந்தத் தடையும் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வினா எண் *187*, திரு. கு. ஜெயக்குமார், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.